**ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி**
கிருஷ்ணசாமி கல்வி அறக்கட்டளையால் நிர்வகிக்கப்படுகிறது
சென்னைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்றது
AC-48, 6வது பிரதான சாலை, அண்ணாநகர்,
சென்னை - 600040.
தொலைபேசி: 044 - 26262977, 26282977
E Mail : skcw2010@gmail.com
website : shrikrishnaswamycollageforwomen.com

# புத்திலக்கியங்களில் பெண்

## (பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

**தொகுதி - 2**

# புத்திலக்கியங்களில் பெண்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2018 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை.<br>ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி,<br>சென்னை-40. |
| கணினி | : | டுடே கிராபிக்ஸ் |
| அச்சாக்கம் | : | டுடே பிரிண்டர்ஸ்<br>எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ்,<br>14/192, பெல்ஸ் ரோடு,<br>சென்னை-05.<br>அலைபேசி:9840083738 / 044-28553797 |
| பக்கங்கள் | : | xxxii + 434 = 466 |
| விலை | : | ₹ 275/- |
| ISBN | : | 978-93-87882-45-4 |


# INTERNATIONAL CONFERENCE ON WOMEN IN CONTEMPORARY LITERATURE


| | | |
|---|---|---|
| Copyrights | : | Shri Krishnaswamy College for Women |
| First Edition | : | December, 2018 |
| Published | : | Department of Tamil<br>Shri Krishnaswamy College for Women<br>Chennai – 600 040. |
| Computer | : | Today Graphics |
| Printing at | : | Today Printers<br>S.R.Complex,14/192, Bells Road,<br>Chennai -5<br>Ph:9840083738 / 044-28553797 |
| Pages | : | xxxii + 434 = 466 |
| Prize | : | ₹ 275/- |
| ISBN | : | 978-93-87882-45-4 |

101. உள்ளும் புறமும் ஊடாடும்
கதைசொல்லியின் மாயபிம்பம் -
லைலா எக்ஸின் புனைவு வெளி
முனைவர் இரெ. மிதிலா 546

102. யாரும் யாருடனும் இல்லை -
மகளிர் உளநிலைச் சிக்கல்கள்
முனைவர் அர. மீனா 553

103. சங்கவை நாவலில் படித்த மற்றும்
பாமர பெண்கள் - ஒரு முரண்
சா. மீனாட்சி 560

104. பெண் படைப்பாளர்கள் (டி.கே. பட்டம்மாள்)
என். முத்துகிருஷ்ணன் 566

105. சு. தமிழ்ச்செல்வியின் அளம் புதினத்தில்
படைப்புகளில் பண்பாட்டுப் பதிவுகளும் மீறல்களும்
முனைவர் சு. முருகேசன் 569

106. பெண்கவிஞர்களின் கவிதைகளில் சமகாலச் சமூகம்
முனைவர் செ. முருகநாதன் 581

107. எஸ்ரா.வின் 'துயில்' நாவலில் பசிப்பிணி மருத்துவர்
முனைவர் ப.சு. மூவேந்தன் 587

108. மறைக்கப்பட்ட வலிகளும்
ஆவணப்படுத்தப்பட்ட வரலாறும்
முனைவர் இரா. மோகனா 592

109. பேதை முதல் மகடூஉ ஈறாக
அ. யுவராணி 601

110. பாவேந்தரின் சிறுகாப்பியங்களில்
பெண்மையின் பெருமை பேசும் காதலும் வீரமும்
முனைவர் பொ. இரமேஷ் 606

111. ஆண்டாள் பிரியதர்ஷினியின்
வாழ்வும் புத்திலக்கிய பங்களிப்பும்
தி. ராதா 613

112. சிவகாமியின் சபதத்தில் சிவகாமி
மற்றும் வானமாதேவியின் காதல் ஓர் ஒப்பீடு
முனைவர் அ. ரேவதி 617

113. சமூக மௌனங்களை உடைத்தெறிந்த
தன் வரலாற்று நாவல்கள்
முனைவர் நா. ரேணுகா 622

## 113. சமூக மௌனங்களை உடைத்தெறிந்த தன் வரலாற்று நாவல்கள்

முனைவர் நா. ரேணுகா
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை

தமிழ் இலக்கிய வகைமைகளில் புனைவுகளற்று யதார்த்த நடையில் எழுதப்படும் கதை வடிவம் தன் வரலாற்று நூல்கள் ஆகும். தன்னைப் பற்றி, தன் வாழ்க்கையைப் பற்றி தானே எழுதுவதற்கு ஒரு துணிவு வேண்டும். அத்துணிவு எல்லோருக்கும் இருப்பதில்லை. இது கலைத்தன்மை கைவரப் பெற வேண்டிய இலக்கிய வடிவமாக விளங்குகிறது. தமிழ் இலக்கியப் பரப்பில் தன் வரலாற்று நூல்கள் குறைவு தான். அதிலும் பெண்கள் எழுதிய தன் வரலாற்று நூல்கள் அரிதாகவே இடம்பெற்றுள்ளன.

தொடக்கத்தில் எழுதப்பட்ட தன் வரலாற்று நூல்கள் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களின் கோர்வையாக அமைந்தன. சொல்லுகின்ற முறையில் கவிதை வடிவத்தையும் உரைநடை வடிவத்தையும் கைக்கொண்டனர் ஆசிரியர்கள். ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பேடு தகவல் பகிர்வுகளாக விளங்குகின்றது. வ.உ.சி. தனது சரிதையைக் கவிதை வடிவில் எழுதியுள்ளார். இந்நூலில் அவரது வலிகளும் வேதனைகளும் கவிதைகளாக உருவெடுத்துள்ளன. உ.வே.சா.வின் என் சரித்திரம் அவரது அனுபவங்களைப் பகிர்கின்றது. கதைப்போக்கில் தொய்வின்றி உரைநடையில் எழுதிய அரிய படைப்பாக அது விளங்குகின்றது. தொண்ணூறுகளில் தன் வரலாற்றை நாவல் அமைப்பில் எழுத முற்பட்டனர். 1992இல் வெளிவந்த பாமாவின் 'கருக்கு'ம், 1998இல் வெளிவந்த அழகிய நாயகி அம்மாளின் 'கவலை (எங்கள் கதை)'யும் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. இவ்விரு நாவல்களும் வாழ்வில் பல இன்னல்களை அனுபவித்த, சந்தித்த பெண்களின் எழுத்துகளாகும். முன்னது தலித் பெண்ணிய நோக்கிலும், பின்னது பெண்ணிய நோக்கிலும் அமைந்த நாவல்களாகும். இவ்விரு நாவல்களும் வாசிப்புத் தளத்திலும் ஆய்வுத் தளத்திலும் கவனத்தைப் பெற்றன.